செய்தி வெளியீடு எண் : 1309 நாள் : 29.08.2024

# அமெரிக்காவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் !

# அமெரிக்க வாழ் தமிழர்கள் திரண்டு இந்திய துணைத் தூதர் முன்னிலையில் விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு !

# தமிழ்நாட்டில் தொழில் தொடங்கிட அமெரிக்கத் தொழில் முதலீட்டாளர்களை இந்தப் பயணத்தில் சந்திக்கிறார் !

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றது முதல் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் தீவிர கவனம் செலுத்தி வருகிறார்கள்.

2030–ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டில் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார வளர்ச்சி என்னும் இலக்கினை முன்வைத்து தமிழ்நாட்டிலும், மலேசியா, சிங்கப்பூர், ஜப்பான், ஸ்பெயின், அரபு நாடுகளிலும் தொழில் முதலீட்டாளர் மாநாடுகளை நடத்தி தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டு வருகிறார்கள். இதுவரை 9.74 இலட்சம் கோடி முதலீட்டில் 31 இலட்சம் இளைஞர்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் தொழில் வாய்ப்புகளை உருவாக்கியுள்ளார்கள். இதுவரை 46 புதிய தொழிற்சாலைகள் மூன்றாண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

முப்பதுக்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளுக்கு அடிக்கல் நாட்டியுள்ளார்கள். இவையெல்லாம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க,.ஸ்டாலின் அவர்கள் மேற்கொண்ட தொழில் வளர்ச்சி முயற்சிகளுக்கு கிடைத்துள்ள மாபெரும் வெற்றிகளாகும்.

இவற்றைத் தொடர்ந்து தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை அதிக அளவில் ஈர்ப்பதற்காகவும், படித்த இளைஞர்களுக்கு அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்காகவும் மேலும் பல புதிய தொழில்களை தமிழ்நாட்டில் உருவாக்கிட வேண்டும் என்னும் ஆர்வத்துடனும் அமெரிக்க நாட்டிற்கு பயணம் மேற்கொண்டுள்ளார்கள்.

சென்னையிலிருந்து கடந்த 27.8.2024 (செவ்வாய்க்கிழமை) இரவு 10 மணியளவில் விமானம் மூலம் புறப்பட்டு அமெரிக்காவிலுள்ள சான்பிரான்சிஸ்கோ மாகாணத்திற்கு சென்றுள்ளார்கள். இன்று (29.8.2024 ) சான்பிரான்சிஸ்கோ விமான நிலையம் வந்து சேர்ந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களை அமெரிக்க வாழ் தமிழ் மக்கள் பெருந்திரளாகக் கூடி நின்று உற்சாகமான முறையில் வரவேற்பு அளித்தனர். அந்த நிகழ்ச்சியில் சான்பிரான்சிஸ்கோவிற்கான இந்தியத் துணைத் தூதர் திரு.ஸ்ரீகர் ரெட்டி, மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா ஆகியோரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த அமெரிக்கப் பயணத்தின்போது அங்குள்ள பல்வேறு தொழில் நிறுவனங்களைச் சேர்ந்த முதலீட்டாளர்களைச் சந்திக்கத் திட்டமிட்டுள்ளார்கள்.

.......

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu